सत्यमेव जयते

இந்தியத் தூதரகம்
கோலாலம்பூர், மலேசியா

**செய்தி அறிக்கை**

**<u>பொது உபகாரச் சம்பளம் திட்டத்தின் கீழ்</u>**
**<u>2017-18ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை</u>**

இந்தியாவில் இளங்கலை, முதுகலை, முனைவர் அல்லது நடனம் & இசை துறையில் கல்வி பயில விரும்பும் மலேசிய மாணவர்கள், இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படும் 2018-19ஆம் ஆண்டிற்கான பொது உபகாரச் சம்பள திட்டத்தின் (General Scholarship Scheme) மூன்று (3) கல்வி உபகாரச் சம்பளத்தில் ஏதேனும் ***<u>ஒன்றுக்கு</u>*** விண்ணப்பிக்கலாம்.

2. விண்ணப்பதாரர்கள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறையில் தங்களது கல்வியைத் தொடர, பல்கலைக்கழகம் அல்லது கல்லூரி இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். மேலும், பல்கலைக்கழகத்திற்கு தேவையான அனைத்து ஆவணங்களையும் முறையாக சமர்ப்பிக்க வேண்டும். **இதுவரை இந்தியாவில் கல்வி பயிலாத விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.** பொறியியல், கட்டிடக்கலை, மனிதநேயம், கலைகள், வர்த்தகம், மேலாண்மை, வணிகமும் நிர்வாகமும், பத்திரிக்கை துறை, ஹோட்டல் மேனேஜ்மெண்ட், விவசாயம், கால்நடை அறிவியல், கால்நடை வளர்ப்பு, அறிவியல், சட்டம், நடனம் மற்றும் இசை துறை உட்பட இந்த கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

3. மருத்துவம், பல் மருத்துவம், தாதியர், இயன் மருத்துவம் போன்ற மருத்துவம் தொடர்பான கல்வித் துறைகளுக்கு இந்த உதவித்தொகை வழங்கப்படாது.

4. இந்த உபகாரச் சம்பளம், விமான கட்டணத்தைத் தவிர, கல்வி கட்டணம், 'லிவிங் அலவன்ஸ்', வீட்டு வாடகை கொடுப்பனவு, கான்டின்ஜென்ட் கிராண்டு, ஆய்வறிக்கை & விரிவுரை செலவுகள், மருத்துவச் செலவு போன்றவற்றை உள்ளடகியுள்ளது.

5. விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து **'Admissions to Alumni' (A2A) web-portal <http://a2ascholarships.iccr.gov.in/>** என்ற ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும்.

★★★★★